

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து: ஆசியாவிலுள்ள சிறுபான்மை சமயத்தினர்: ஆசிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்களும், இதர சிறுபான்மை சமயத்தினரும் தங்களின் விசுவாசத்தை சுதந்திரத்துடன் செயல்படுத்த வேண்டுமென்று**

**ஜனவரி மாத கரு : கிறிஸ்துவில் என்னை உணர்தல்**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஜன 14 ஞா | காலை 7.00<br>காலை 9.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம) | பொதுக்கால 2-ஆம் ஞாயிறு<br>பொதுக்கால 2-ஆம் ஞாயிறு |
| ஜன 15 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| ஜன 18 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| ஜன 19 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| ஜன 20 சனி | காலை 6.30<br>மாலை 4.30<br>மாலை 6.30 | திருப்பலி (ஆ)<br>திருமணம் (த)<br>புகழாராதனை/ஆராதனை/திருப்பலி (த) | புனித பேபியன், செபஸ்டியன்<br>வின்சன் ஜோசப் & ரூபி எமிலியா விலவேந்திரன்<br>புனித பேபியன், செபஸ்டியன் (முனிசிபல் சிற்றாலயம்) |
| ஜன 21 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 5.30 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>நவநாள்/ திருப்பலி (த) | பொதுக்கால 3-ஆம் ஞாயிறு<br>பொதுக்கால 3-ஆம் ஞாயிறு<br>கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புந்தோங் தீகா |

## பங்கு நடவடிக்கைகள்

| ஜன 14~20 | மாலை 7.30 | புலூமாதே | அதிச வாரம் |
|---|---|---|---|
| ஜன 14 ஞா | காலை 10.30<br>மதியம் 12.00 | பெர். மையம்<br>ஆலயம் | மறைக்கல்வி (ஆ & த)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| ஜன 15 திங் | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| ஜன 16 செவ் | காலை 8.30<br>காலை 9.30 | பெர். மை 1-3<br>பெர். மை 1-1 | பங்கு பரிந்துரை குழு<br>மூத்தோர் பணிக்குழு- மையக்குழு கூட்டம் |
| ஜன 18 ~20 | மாலை 7.30 ~10.00 | பெர். மையம் | RCIA போதனை |
| ஜன 18 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| ஜன 20 சனி | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| ஜன 21 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00<br>மாலை 7.30 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம்<br>புந்தோங் தீகா | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த)<br>கிஅ சிற்றாலய கூட்டம்- மேற்கு திசை தலைவர்கள் |

<u>2018 ஜனவரி மாத திருமணங்கள்</u>

ஜன 27 காலை 11.00 திருமணம் (த) நேசன் ராஜா த/பெ பிரான்சிஸ் & மோனிக்கா @ பவானி த/பெ ராமசாமி

ஜன 27 மதியம் 2.00 சடங்கு (ஆ) ஜான் பிரகாஷ் த/பெ பிரான்சிஸ் & டேபோரா ஜென்சி த/பெ ஜான்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. மூத்தோர் பணிக்குழு:** அடுத்த ஒன்றுகூடுதல் 23/1/18 (செவ்) காலை 9.30க்கு பெர். மையத்தில் திருப்பலியுடன் தொடங்கும். கலந்துக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் 21/1/18 (ஞாயிறு) முன்பாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். தொலைபேசி வழியாகவும் பெயர்களை பதிவு செய்யலாம்.

**2. வாழை இலை மதிய உணவு:** புனித வின்சென்ட் டி போல் (SSVP) வாழை இலை மதிய உணவை ஏற்பாடு செய்திருக்கிறது. மதிய உணவு புனித மைக்கல் ஆலயத்தில் 21 ஜன 2018 (ஞாயிறு) காலை 9.00 ~ மதியம் 2.00 வரை. ஒரு டிக்கெட்டின் விலை ரிம 15/- (ஒருவருக்கான உணவு)

**3. இளைஞர்கள் கூட்டம்: நாள்**: 26 ஜன 2018 (வெள்ளி) **நேரம்**: மாலை 8.00 மணி **இடம்**: பெர். மை 1-1

**4. அதிச ஒன்றுகூடுதல்:** அதிச மாத ஒன்றுகூடுதல் ஒரு மணி நேரத்திற்கு மேல் இருக்கக்கூடாது. தலைவர்கள் தயவு செய்து இதை கருத்தில் கொள்ளுங்கள். உணவு தேவையில்லை. தேவைப்பட்டால் பானங்கள் கொடுக்கலாம்.

**5. 2018 பொங்கல் கொண்டாட்டம்:** இந்த வருடம் பொங்கல் கொண்டாட்டத்தை புலூமா கலாச்சாரக்குழுவும், ஈப்போ தமிழர் திருநாள் கொண்டாட்ட இயக்கமும் இணைந்து ஏற்பாடு செய்திருக்கின்றன. 14 ஜன 2018 (ஞாயிறு) மாலை 3.30க்கு பங்கு வளாகத்தில் நடைபெறும் இந்த கொண்டாட்டத்தில் கோலப் போட்டியில் கலந்துக்கொள்ள ஆர்வமுள்ளவர்கள் உங்களது பெயர்களை 14 ஜன 2018 (ஞாயிறு) திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டபத்தில் பதிவு செய்யலாம். எல்லா ஆண்களும் பெண்களும் கலாச்சார உடைகளை அணிந்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

**6. ஊதாரி மகன் பற்றிய 3 நாள் போதனை:** RCIA/ முதியோர் உறுதிபூசுதல் வேட்பாளர்களுக்கும், அவர்களின் ஆதரவாளர்களுக்கும் மற்றும் அவர்களின் பயிற்றுனர்களுக்கும் உரியது. **நாள்**: 18 ஜன 2018 (வியா) ~ 20 ஜன 2018 (சனி) **நேரம்**: மாலை 7.30 ~ 10.00 வரை. **இடம்**: பெர். மையம் **படைப்பாளர்**: திரு. ரமேஷ் விக்டர்

**7. திருநீற்று புதனுக்கு 2017இல் ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலைகள்:** விபூதி புதனுக்கு பயன்படுத்தப்படும் விபூதி முந்தைய ஆண்டு ஆசீர்வதிக்கப்பட்ட ஓலைகளிலிருந்து வருகிறது. இவ்வாண்டு விபூதி புதன் 14/2/18ல் வருகிறது. தயவு செய்து பழைய ஓலைகளை 11/2/18 (ஞாயிறு) நண்பகலுக்கு முன்பாக ராணியிடம் (தூயகப் பணியாளர்) / பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

**8. ஜனவரி மாதம்: திருஇருதய ஆண்டவருக்கு குடும்ப அர்ப்பணிப்பு:** இந்த மாத தலைவர்கள் ஒன்றுகூடுதலின் போது, திருஇருதய ஆண்டவர் உருவப்படமும், செபத்தாளும் உங்களின் சம்பந்தப்பட்ட தலைவர்களின் வழியாக அதிசவில் உள்ள எல்லா குடும்பங்களுக்கும் விநியோகிக்கப்படும். இது குடும்ப செபத்திற்காகவும், குடும்பத்தை இயேசுவின் திருஇருதயத்திற்கு அர்ப்பணிக்கவும் வழங்கப்படுகிறது. தலைவர்களுக்கு வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவர்கள் அதிச ஒன்றுகூடுதலின் போது உங்களுடன் பகிர்ந்து கொள்வார்கள். தயவு செய்து திருஇருதய ஆண்டவரின் உருவப்படத்தையும், செப தாளையும் உங்கள் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். இந்த செபத்தை உங்கள் குடும்பத்தாருடன் சேர்ந்து செபியுங்கள்.

**9. மண்டப சீரமைப்பு:** நமது லூர்து மண்டபம் வருந்ததக்க நிலையில் உள்ளது. நான் கடந்த ஆண்டு அறிக்கைத்தாளில் அறிவித்தப்படி நாம் மண்டபத்தை சீரமைக்க உள்ளோம். குளிரூட்டிகளுடன் புதிதாக சீரமைக்கப்பட்ட மண்டபம், பங்கு வருவாயை அதிகரிப்பதற்காக திருமணங்களுக்கும், மற்ற நோக்கங்களுக்காகவும் வாடகைக்கு விடப்படும். உங்களுக்கு ஏதேனும் கடுமையான, செல்லத்தக்க காரணங்கள் (நியாயமான எதிர்ப்புகள்) இருந்தால் கட்டுமான வேலை தொடங்குவதற்கு முன்பே, பங்கு குருவானவர்களிடம் தெரிவியுங்கள்.

**10. பங்கு திருவிழா:** பங்கு திருவிழா கொண்டாட்டம் 2 பிப் ~ 11 பிப் 2018 நடைபெறும். இந்த வருட கொண்டாட்டத்திற்கான கருத்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் குடும்பத்தை பற்றிய ஆவணம்: Amoris Laetitia இதன் அர்த்தம் **"அன்பில் மகிழ்ச்சி"**. அதே கருத்து அனைத்து சிற்றாலயத்திற்கும் பயன்படுத்தப்படும்.

**11. 2013 ~2017க்கான பிறரன்பு நிதியின் சுருக்கம்:** இதைப்பற்றி நீங்கள் அறிந்திராவிட்டால்! இப்பங்கில் சுமார் 5 இயக்கங்கள் பிறரன்புப்பணி, சேவை, ஏழைகளுக்கு உதவுதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளன. அவை புவிடிபா, ஏழைகளுக்கு உணவளிக்கும் குழு, நம்பிக்கை மையம், வாழ்வின் ஊற்று மையம், பங்கு ஏழைகள் நிதி ஆகும். தனிப்பட்டவர்கள் பலரும் ஏழைகளுக்கு உதவி வருகின்றனர். நாம் **"பினாங்கு மறைமாவட்ட பினாங்கு மனித மேம்பாட்டு அலுவலகத்திலிருந்தும்"** உதவி பெறுகிறோம். கடந்த 5 ஆண்டுகளாக பங்கின் இந்த இயக்கங்கள் சுமார் ரிம 300,000.00 ஐ செலவிட்டுள்ளன. வழங்கப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் உணவைத்தவிர்த்து இது ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரிம 60,000.00 ஆகும் ஏழைகளுக்கு உதவும் வழிமுறை பின்வருமாறு: **முதல்படி:** தனிப்பட்டவர்கள் ஏழைகளுக்கு உதவ கடமைப்பட்டுள்ளனர். **இரண்டாம் படி**: தேவைப்படும் உதவி தனிப்பட்டவரால் நிறைவேற்ற இயலாமல் போனால், நீங்கள் இதனை அதிசவின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம். உதவுவது அதிசவின் கடமையாகும். **மூன்றாம் படி**: அதிசவினாலும் இயலாவிட்டால், இது பங்கின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படலாம்.

**12. 2018க்கான பங்கு கருத்து:** "கருணை மற்றும் தன்னலமற்ற பணி"யை நாம் 2018க்கான கருத்தாக தேர்ந்தெடுத்துள்ளோம். இவ்வாண்டில் 5 பிறரன்பு திட்டங்கள் 5 திசைகளால் மேற்கொள்ளப்படும். அதிச தலைவர்களுடன் திசை தலைவர்கள் இணைந்து ஏற்பாடு செய்யும் இத்திட்டங்கள் பஒகு (PAT) மேற்பார்வையினாலும் உதவியுடனும் செயல்படுத்தப்படும். ஆண்டு இறுதி மதிப்பீடு இதையொட்டியே இருக்கும்.

**13. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி டிசம்பர் 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **369,972.82** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **372,602.92** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**07/01/18 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,336.00 **காலை 9.00** - RM 2,082.00 **மொத்தம்** - RM 3,418.00

**2017** - RM 350.00 **2018** - RM 270.00 **மொத்தம்** - RM 620.00 **ஆலய பராமரிப்பு** - RM 1,830.45

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்